# கோலாலம்பூர் கேளிக்கை மையத்தில் போலீஸ், மாநகர் மன்றம் சோதனை!

(நமது நிருபர்)



கோலாலம்பூர், ஜூலை 23-

கோலாலம்பூர் மாநகர் மன்றம், போலீஸ் மற்றும் தேசிய போதைப்பொருள் எதிர்ப்பு நிறுவனமும் இணைந்து இங்குள்ள கேளிக்கை மையம் மற்றும் ஸ்னூக்கர் மையத்தில் வார இறுதியில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டன.

கடந்த சனிக்கிழமை இரவு 9.00 மணி தொடங்கி மறுநாள் அதிகாலை 3.00 மணிக்கு முடிவுற்ற இச்சோதனை நடவடிக்கையில் ஜாலான் ஈப்போ, செள கிட், ஜாலான் துன் ரசாக்கிலுள்ள 5 தலங்கள் சோதனையிடப்பட்டதாக மாநகர் மன்றம் தெரிவித்தது.

இத்தலம் சட்டப்பூர்வமான உரிமமின்றிக் கேளிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு உரிம நிபந்தனைகளையும் மீறியிருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

2 தலங்களை உடனடியாக மூடும்படி உத்தரவிடப்பட்டதோடு 4 கேளிக்கை மையங்களிலிருந்து பல்வேறு வகையான உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

கேளிக்கை மையம் உரிமமின்றிச் செயல்பட்டது, அந்நியர்களை உதவியாளர்களாக வேலைக்கு அமர்த்தியது, அனுமதிக்கப்பட்டதைக் காட்டிலும் அதிக நேரத்திற்கு கேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்துதல் போன்ற குற்றங்களுக்காக 7 அபராத நோட்டீஸ்கள் வெளியிடப்பட்டன.

இந்த அமலாக்க நடவடிக்கைகள் கூட்டரசுப் பிரதேச உணவு அமைப்புக்கான ஊராட்சி உரிமத் துணைச் சட்டத்தின் கீழ் கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேச வர்த்தக, வாணிப மற்றும் தொழில்துறை உரிமத் துணைச் சட்டம் 2016, 1993 கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேசக் கேளிக்கை விதிமுறை, 1993 கோலாலம்பூர் கேளிக்கைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டதாக ஓர் அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.